## இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்

# கட்டுமானப் பணி டிசம்பரில் தொடங்க வாய்ப்பு

**சென்னை, ஏப்.5:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், 52.01 கி.மீட்டரில் கட்டுமானப்பணி நிகழாண்டில் டிசம்பரில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள 66.8 கி.மீட்டருக்கான கட்டுமானப்பணி அடுத்த ஆண்டு ஜூனில் தொடங்க வாய்ப்பு உள்ளது.

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணி முடிந்து, விமான நிலையம்-வண்ணாரப்பேட்டை, சென்ட்ரல் - பரங்கிமலை வரை ஆகிய இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத்தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரையிலான விரிவாக்கம் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.



இதற்கிடையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்ட திட்டம் ரூ.79,961கோடி செலவில் மூன்று வழித்தடங்களில் 118.9 கி.மீ.க்கு ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. மாதவரம்-சிறுச்சேரி சிப்காட்(45.8 கி.மீ.), மாதவரம்-சோழிங்கநல்லூர்(47 கி.மீ.), கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி(26.1 கி.மீ.) ஆகிய பாதைகள் இந்தத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.இந்நிலையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், 52.01 கி.மீட்டரில் கட்டுமானப்பணி நிகழாண்டில் டிசம்பரில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள 66.8 கி.மீட்டரில் கட்டுமானப் பணி அடுத்த ஆண்டு ஜூனில் தொடங்க வாய்ப்பு உள்ளது. கட்டுமானப் பணிக்கு தேவையான நிதிக்காக சர்வதேச வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தின், 66.8 கி.மீ. பாதையில் மண் ஆய்வு செய்ய பல இடங்களில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதில், கலங்கரை விளக்கம், பூந்தமல்லி, தியாகராயநகர் ஆகியவை அடங்கும். இந்தப்பணி நிகழாண்டு இறுதியில் முடிவடைய வாய்ப்பு உள்ளது. மண் ஆய்வுக்காக, சிறிய தொகுப்பு அடிப்படையில் டெண்டர் கோரப்படுகிறது. இதன்மூலம், மண் ஆய்வுப் பணி முடிந்து, விரைவாக கட்டுமானப்பணியை தொடங்க உதவியாக இருக்கும். இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், 52.1 கி.மீ. கட்டுமானப்பணிக்கான டெண்டர் நிகழாண்டில் ஜூனில் வெளியிடப்படும். இதைத்தொடர்ந்து, மீதமுள்ள 66.8 கி.மீ. பாதையில் கட்டுமானப் பணிக்காக டெண்டர் வெளியிடப்படும் என்றனர்.